# C.S.I TAMIL CHURCH - OMAN


# “பாலைவன மன்னா”




மன்னா – 9 டிசம்பர் 2019 பிரதி – 9



# ஆயர் மடல்



சமாதான காரணராய் இம்மண்ணில் அவதரித்த இறை இயேசு பாலனாம் இனியத் திருப்பெயரில் அன்பின் நல்வாழ்த்துக்கள்.

டிசம்பர் மாதம் பண்டிகை மாதம். அகில உலகமும் கிறிஸ்து பிறப்புப் பண்டிகையை எதிர்கொள்ள ஆயத்தப்படும் நாட்கள். ஆண்டவரை பணிந்து கொள்ளவும், அவர் திட்டம் அறியவும் அதிகமாய் ஜெபிப்பதிலும், திருமறைக் கற்றுக்கொள்வதிலும், ஆலயத் தொழுகைகளில் வாஞ்சையாய் பங்குபெறவும் அன்பாய் கேட்கிறேன்.

**சமாதானமாய்க் கொண்டாடுவோம்:-**

கிறிஸ்து பிறப்புப் பண்டிகையை சமாதானமாய் கொண்டாட அழைக்கிறேன். பணி நெருக்கடிகள், நேரமின்மை, உடல் அசதி போன்றவைகள் நமது சமாதானத்தை இழக்கச்செய்யும் காரணிகளாய் அமைந்துவிடுகிறது. ஆனாலும் சமாதான காரணராய் இம்மண்ணில் நம்மை மீட்கும்படி வந்த இயேசு பாலனை உள்ளத்தில் ஏற்று பண்டிகையைக் கொண்டாடுவோம்.

**சாதுரியமாய்க் கொண்டாடுவோம்:-**

கொண்டாட்டம் என்றாலே ஐக்கியம், ஒருமைப்பாடு, இணைதல், மகிழ்தல் இவைகளை உள்ளடக்கிய ஒன்று. எனவேதான் ஆண்டுவிழாக்கள், சிறப்புத் தொழுகைகள், மகிழ்வின் விருந்துகள் என பல அம்சங்கள் சந்தோஷத்தின் வெளிப்பாடாய் அமைகிறது. சிறுசிறு சலசலப்பு, சின்ன கருத்துவேறுபாடுகள், சிறிய சுயவிருப்பு வெறுப்புக்களை, பொதுமைப்படுத்துவதும், பெரிதாக்குவதும் நமது சந்தோஷத்திற்கு தடை உருவாக்கிவிடும். எனவே இவைகளைக் களைந்து கிறிஸ்து பாலனை தரிசிக்க ஒன்றிணைந்த சாஸ்திரிகள், மேய்ப்பர்கள், தூதர்களைப்போல நாமும் இணைந்து, நோக்கத்தைக் கூர்மைப்படுத்தி சந்தோஷமாய் கிறிஸ்து பிறப்பு பண்டிகையை எதிர்கொள்ள ஆண்டவர் அருள்செய்வாராக.


அனைவருக்கும், போதகர் மற்றும் போதகர் குடும்பத்தின் **கிறிஸ்துபிறப்பு நல்வாழ்த்துக்கள்.**

**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்**

# ஆயர் அருளுரை

## சமாதான வாழ்வு




“நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு எனப்படும்” (ஏசாயா 9:6)

சமாதான பிரபுவாய் இம்மண்ணில் வந்த இயேசு பாலகனின் இனிய நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். கிறிஸ்து பிறப்புப் பண்டிகையைக் கொண்டாட ஆயத்தப்படும் காலங்களில் இயேசு நாதரின் பிறப்பின் மகிமையை தியானிப்பதும், இறைபாதம் அமர்ந்து அவரைத் துதிப்பதும் மகிமைக்குரிய ஒன்று என நாம் உணர்ந்துகொள்வோம். கிறிஸ்துவின் அளவற்ற அன்பை உணர்த்தும் நிகழ்வுதான் கிறிஸ்மஸ், “விண்ணின் தேவன் மண்ணின் மைந்தர்க்காய் மனுக்கோலம் பூண்டு, மண்ணில் வந்து மனுமக்களின் மீட்புக்காய் தன்னையே கொடுத்தார்” என்பதுதான் வரலாற்று உண்மை. மீட்பின் செய்தி. அவர் நாமம் சமாதானப்பிரபு. சமாதானத்தை மண்ணில் தரவந்தவர். சமாதானத்தைக் குறித்து சங்கீதக்காரன் தாவீது கூறும்போது,

“உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும், உன் அரமனைகளுக்குள்ளே சுகமும் இருப்பதாக” (சங். 122:7) எனக் குறிப்பிடுகிறார். சமாதானம் இல்லத்திற்குள் இருக்கவேண்டியது என்றும், ஏசாயா 54:13-ல் “உன் பிள்ளைகளெல்லாம் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள். உன் பிள்ளைகளின் சமாதானம் பெரிதாயிருக்கும்” என்று இல்லத்தாருக்கும் சமாதானம் வேண்டும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

அருள்நாதர் இயேசு சமாதான காரணராய் பிறந்தார்.

### 1. சமாதான பிரபுவாய் வந்தார்:-

நம்முடைய கர்த்தருடைய நாமம் சமாதான கர்த்தர் (2தெச. 3:16) திருமறையில் கர்த்தருடைய நாமம் பலவிதங்களில் சொல்லப்பட்டாலும், சமாதான கர்த்தர், சமாதானத்தைத் தரவல்லவர், சமாதான பிதா என்று அழைக்கப்படுகிறது. சமாதான கர்த்தர், சமாதான பிரபுவாய் மண்ணில் அவதரித்து தன்னை, சமாதானத்தை மண்ணில் விதைத்தார்.

**2. சமாதானம் பகிர வந்தார்:-**

"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன்" என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்" (யோவான் 14:27).

சமாதானப் பிரபுவாய் வந்த இயேசு பாலகன் சமாதானம் பகிர வந்தார். பிறப்பின் மகிமையைக் கொண்டாடும் தூதர்கள் லூக்கா 2:14-ல் "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லித் தேவனைத் துதித்தார்கள்". பூமியில் சமாதானம் இயேசு பாலகனின் வருகையால் உருவானது என்பதை உணர்ந்துகொள்வோம். சீடர்கள் நடுவில் இயேசு உங்களுக்கு சமாதானம் என்று கூறி தன்னை வெளிப்படுத்துவதை லூக்கா 24:36-ல் குறிப்பிடுகிறார். "என்னிடத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும்" யோவான் 16:33-ல் கூறும் ஆண்டவர் இயேசு சமாதானம் பகிர வந்தார்.

**3. சமாதான பாத்திரனாக்க வந்தார்:-**

"சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள் (மத்தேயு 5:9).

சமாதானத்தை பகிர்ந்தளித்த ஆண்டவர் நம்மை சமாதானம் பண்ணுகிறவர்களாய் வாழ அழைக்கிறார். எனவே உப்பு உவமையை குறிப்பிடும்போது மாற்கு 9:50-ல் "உங்களுக்குள்ளே உப்புடைய-வர்களாயிருங்கள்; ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர்களாயும் இருங்கள் என்றார்" நம்மில் காணப்படும் சமாதானம் நம்மோடிருப்பவர்களுக்கு பகிரப்படவேண்டும் என்பதை நமக்கு சுட்டிக்காட்டும்படியாய் ரோமர் 12:18-ல் "கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" என்று குறிப்பிடுவதோடு ரோமர் 15:33-ல் சமாதானத்தின் தேவன் உங்களனைவரோடுங்கூட இருப்பாராக என்று வாழ்த்துதலும் இடம்பெறுகிறது.

கிறிஸ்து பிறப்பு பண்டிகையைக் கொண்டாடும் நாம் சமாதானபிரபுவை உள்ளத்தில் ஏற்று சமாதானத்தைப் பகிர்ந்து சமாதான பாத்திரன்களாய் வாழ ஆண்டவர் அருள்புரிவாராக.

அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துக்கள்.

**அன்புடன் போதகர்,**
**Rev. Dr. N. ஜெசின்**

# சிறுவர் பகுதி

## பாச நேரம்



சுறுசுறுப்பான தொழில் முனைவர் எபனேசர். உயர்ரக சந்திப்புகளை விறுவிறுப்பாக ஏற்பாடு செய்து, துறுதுறுவெனப் பேசி, பெரிய பெரிய ஆர்டர்களை அபகரிப்பதில் அவருக்கு நிகர் அவரே! அதனால் அவரது வீட்டிலும், தொழிலகத்திலும் செல்வம் கொழித்தது. பரபரப்பான பிஸ்னஸ்களை முடித்துவிட்டு, நள்ளிரவிலேதான வீடு திரும்புவார். தூங்கிக்கொண்டிருக்கும் பன்னிரண்டு வயது மகனுக்கு அன்போடு இரவு முத்தமிடுவார். சாப்பிடுவார்; தூங்குவார்; அதிகாலையில் எழுவார். அப்போதும் தூங்கிக்கொண்டிருக்கும் மகனுக்கு அதிகாலை முத்தமிடுவார். காப்பி சாப்பிடுவார், அப்படியே பறந்துவிடுவார்; பரபரப்பான பிஸ்னஸ் உலகில் சங்கமமாகி பணம்பார்க்க ஆரம்பித்துவிடுவார்; ஞாயிற்றுக்கிழமை உள்பட,

ஒருநாள்.. “அப்பாவைப் பார்த்த பிறகுதான் தூங்குவேன்” என்று அடம்பிடித்தான் புத்திரன். கொட்ட கொட்ட விழித்திருந்தான் நள்ளிரவுவரை! ஏனென்றால் அடுத்தநாள் அவனுக்கு விடுமுறை. அப்பா வந்தார், தூங்காத மகனைக் கண்டு வாரி அணைத்து வாரி முத்தமிட்டார்; பாசமழை பொழிந்தார். பாசமழைத்துளி சொட்டச் சொட்ட பனிரெண்டு வயது புத்திரனும் சந்தடி சாக்கில் கேள்வி ஒன்றை முன்வைத்தான்; அப்பா ஒரு நாளைக்கு நீங்க எவ்வளவு சம்பாதிப்பீங்க? தோராயமாகச் சொல்லுங்க? ‘இந்த சிறுவயதிலேயே இப்படி ஒரு பிசினெசு மூளையா? இப்படி வியந்த அப்பா பெருமை பொங்க பேசினார்; டேய் அப்பாவோட ஒருநாள் சம்பாத்தியம் பத்தாயிரத்துக்குக் குறையாதுடா! கேட்டுவிட்டு மலைத்து நின்ற மகன் தான் நீண்ட நாளாகத் தேக்கி வைத்திருந்த விண்ணப்பத்தை விட்டெறிந்தான். அப்பா.. எனக்கு ஒரு ஐயாயிரம் செலவுக்கு வேணும், தரமுடியுமா? கேட்டவுடனே கத்திவிட்டு தகப்பனார்; என்னது ஐயாயிரமா? உனக்கெதுக்கு ஐயாயிரம்? அது உன் அப்பாவோட அரைநாள் சம்பாத்தியம் தெரியுமா? ஐயாயிரமெல்லாம் கிடையாது போ!

அப்பாவின் அன்பற்ற வார்த்தைகளைக் கேட்டு அழுதக் கண்ணீரோடு தூங்கப் போய்விட்டான் புத்திரன். “மகனைத் திட்டிவிட்டோமே, நாம் சம்பாதிப்பதெல்லாம் அவனுக்குத்தானே’ இப்படியெல்லாம் நினைத்து நினைத்துத் தூங்காத அப்பா, அதிகாலையில் எழுந்தார். மகனை எழுப்பினார்; அவனது கையில் அவன் கேட்ட ஐயாயிரத்தைத் திணித்தார். முத்தமிட்டார். வாங்கிய மகன் உற்சாகமாக ஓடிப்போய் தனது பர்ஸை எடுத்தான். அதில் ஏற்கெனவே சிறிது சிறிதாகச் சேர்த்து வைத்திருந்த

ஐயாயிரம் ரூபாயை வெளியே எடுத்தான். இரண்டையும் சேர்த்து அப்பாவின் கைகளில் திணித்துவிட்டு சொன்னான்;

“அப்பா! இதோ நீங்கள் ஒரு நாளைக்குச் சம்பாதிக்கின்ற பத்தாயிரம் ரூபாய், இதை வைத்துக்கொண்டு இந்த விடுமுறைநாள் முழுதும் உண்டு, உறவாடி, உலாப்போக என்னோடு இருக்கமுடியுமா? ப்ளீஸ்!” என்றான் எதிர்பார்ப்பு நிறைந்த கண்களுடன்! ☺

**காலம் பார்க்காமல்**

**குழந்தைகளோடு கொஞ்சிக் கொஞ்சி வாழும் வாழ்வு ...**
**ஒரு முதியோர் காப்பீட்டுத்திட்டம்!**

பாலனாய் பிறந்த இயேசு நம்மோடு இருக்கும்படியாக இவ்வுலகம் வந்தார். அவரோடு வாழ நாம் ஆயத்தப்படுவோமா?

**அன்புடன் போதகர்**

## கிறிஸ்மஸ் மரம்



16-ம் நூற்றாண்டில் மார்ட்டின் லூத்தர் அவர்களால் உருவாக்கப்பட்ட புரோட்டஸ்டான்டு கிறிஸ்தவத்தோடு இணைந்ததுதான் கிறிஸ்மஸ் மரம். அந்நாட்களில் பச்சை பசேலான மரங்களை வண்ணத்தாள்களாலும், விளக்குகளாலும் அலங்கரித்து இல்லங்களிலும் கொண்டாட்ட தலங்களிலும் வைத்து மகிழ்ந்தனர். முதல் கிறிஸ்மஸ் மரம் 1576-ம் ஆண்டு ஜெர்மனியில் ஓர் இல்லத்துக்கு முன் வைக்கப்பட்டதாக பதிவு ஒன்று உள்ளது.

## கிறிஸ்மஸ் தாத்தா



4-ம் நூற்றாண்டு வாழ்ந்த கிரேக்கப் பேராயர் செயின்ட் நிக்கோலாஸ் அவர்கள் நினைவாக கொண்டாடப்படுகிறது. இரக்க உணர்வும், உதவும் தன்மையும் கொண்ட இவர் பண்டிகைக் காலங்களில் ஏழைகளுக்கும், சிறுவர்களுக்கும் பரிசுகளை வழங்கி மகிழ்விப்பார். இதை மையமாகக்கொண்டு அவரது மறைவுக்குப்பின் அவரைப்போன்று வேடமிட்டு பரிசு வழங்கி மகிழ்விக்கும் வழக்கம் நாடுகளிடையே பரவியது. இன்றும் தொடருகிறது.

## விசுவாசத்தினாலே பாலன் இயேசு உங்கள் இருதயங்களில்...



**விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன் (எபேசியர் 3:17,19).**

பாலனாய் பிறந்து சமாதான வாழ்வு தந்த இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

அப்போஸ்தலனாகிய பவுல், தம்மை போலவே திருச்சபை விசுவாசிகளும் தெய்வ பக்தியுடன் வாழவேண்டும் என்று சொல்லி பல கடிதங்களை எழுதியவர். எபேசிய திருச்சபை விசுவாசிகளுக்கு தனது தனிப்பட்ட ஜெபத்தில் காணப்பட்ட ஏழு ஜெப விண்ணப்பங்களை வெளிப்படுத்தி அதேபோல நீங்களும் ஜெபிக்கவேண்டும் என்று வலியுறுத்தினார். அந்த ஏழு ஜெப விண்ணப்பங்கள் எபேசியர் 3:15,19-ல் நீங்கள் வாசித்து அறிந்துகொள்ளலாம். அவை என்னவென்றால்,

1. நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவேண்டும்.
2. கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவேண்டும்.
3. நீங்கள் கிறிஸ்துவின் அன்பிலே வேரூன்ற வேண்டும்.
4. நீங்கள் கிறிஸ்துவின் அன்பிலே நிலையாக நிற்கவேண்டும்.
5. கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று நீங்கள் உணரவேண்டும்.
6. அறிவுக்கெட்டாத அந்த அன்பை நீங்கள் அறிந்துகொள்ள வல்லவர்களாக மாறவேண்டும்.
7. நீங்கள் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும் வேண்டும்.

### 1. அறிந்து விசுவாசியுங்கள்:-

இந்த வசனத்தில் உள்ள **'வாசமாயிருக்கவும்'** என்ற வார்த்தையை கவனியுங்கள். இது ஒரு கனமான வார்த்தை என்று சொல்லலாம். இந்த வார்த்தையை கிரேக்க மொழியில் இருந்து மொழிபெயர்த்தால் தம் வீட்டை அமைத்தல் என்று பொருள்படும். இது வாசமாயிருக்கவும் என்ற வார்த்தையைவிட நிறைவான பொருளைத் தருகின்றது. அதாவது விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயத்தில் தம்முடைய வீட்டை அமைக்க விரும்புகின்றார்.

அது என்ன விசுவாசம் என்று கேட்கின்றீர்களா? கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டது (சங். 33:6) என்று நீங்கள் முழுமனதோடு விசுவாசித்து நம்பவேண்டும். ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி இயேசுவாக மண்ணில் உதித்ததை (யோவான் 1:1,14) நீங்கள் முழு மனதோடு விசுவாசித்து நம்ப வேண்டும். தேவன் நம்மை வில்லினாலும், பட்டயத்தினாலும், யுத்தத்தினாலும், குதிரை வீரரினாலும் இரட்சியாமல் (விடுதலை) அவருடைய குமாரனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவால் நம்மை விடுவிப்பார் (ஓசியா 1:7) என்று நீங்கள் முழுமனதோடு விசுவாசித்து நம்பவேண்டும். தேவன் தமது பரிபூரண திட்டத்தின்படி தமது குமாரனாகிய இயேசுவை இந்த உலகிற்கு அனுப்பினார் என்றும், உங்களுடைய பாவங்களுக்கு தண்டனையாக மரணத்தை இயேசு ஏற்றுக்கொண்டு சிலுவை மீது மரித்தார் என்றும் நீங்கள் முழுமனதோடு விசுவாசித்து நம்பவேண்டும். நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் (2கொரி. 5:21) என்று நீங்கள் விசுவாசித்து நம்பவேண்டும்.

## 2. அறிக்கை செய்து விசுவாசியுங்கள்:-

கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்கிறது (ரோமர் 10:9-11). கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள். அப்பொழுது நீங்கள் மட்டுமல்லாது உங்களுடைய வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள், பாதுகாக்கப்படுவீர்கள் (அப். 16:31). இந்த விசுவாசம் உங்களை அழிவிலிருந்து பாதுகாப்பதோடு அல்லாமல் உங்களுக்கு நித்திய ஜீவனைத் தந்து உங்களை நிலைநிற்கச் செய்யும் (2கொரி.1:24). திரியேக தேவன், வார்த்தையால் அகில உலகத்தையும், அண்ட சராசரத்தையும் படைத்தவர். நட்சத்திரங்களை பெயர் சொல்லி அழைப்பவர். மேலும் எல்லாருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானதுபோல, மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை (அப். 17:25) என்று வேத வசனம் சொல்கின்றது. இப்படிப்பட்ட மகத்துவம் நிறைந்த தேவகுமாரன் இயேசு உங்களுடைய இருதயத்தில் தமது வீட்டை அமைக்க விரும்புகின்றார் என்றால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கின்றது அல்லவா. நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? (1கொரி. 3:16).

இயேசுதான் எனது பாவங்களுக்காக இரத்தம் சிந்தியவர் என்று நீங்கள் சொல்லும்பொழுது, சர்வ வல்லவராம் இயேசு உங்கள் இருதயத்தில் தமக்கென வீட்டை அமைத்து அதிலே பரிசுத்த ஆவியானவரை குடியமர்த்துவார். உங்களுக்காய் ஜீவன் தந்த கிறிஸ்துவை உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கும்படி அனுதினமும் ஜெபிப்பீர்களா? அவர் உங்கள் இருதயத்தில் இருந்தால் நிச்சயமாக நீங்கள் பாவத்திலே விழமாட்டீர்கள்.

வார்த்தையால் சகலத்தையும் படைத்த இயேசுவே, எனது பாவத்திற்காக நீர் சிலுவையில் இரத்தம் சிந்தியதை நம்புகின்றேன். விசுவாசிக்கின்றேன். பாலனாய் பிறந்த கிறிஸ்து எனது இருதயத்தில் அனுதினமும் வாசமாயிருக்க, தங்கியிருக்க என்னை அர்ப்பணிக்கின்றேன். உம்மை வேதனைப்படுத்தும் பாவங்களை இனிமேல் நான் செய்யமாட்டேன்.

என்னுள்ளே வாழும் இறை இயேசுவின் திட்டத்துக்கும், சித்தத்துக்கும் என்னை ஒப்புக்கொடுக்கிறேன் என்று மனதார ஆண்டவரிடம் ஒப்புக்கொடுத்து, இந்த ஆண்டு கிறிஸ்து பிறப்பு பண்டிகையைக் கொண்டாட ஆயத்தப்படுவோம். ஆண்டவர் தாமே நம்மை ஆசிர்வதிப்பாராக. ஆமென்!

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**

**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## திருச்சபை கமிட்டியின் கிறிஸ்மஸ் வாழ்த்து

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!




ஆண்டவரும் அருமை இரட்சகருமாய் இருக்கிற இயேசுகிறிஸ்துவின் இனியநாமத்தில் உங்களுக்கு என் அன்பின் கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள். நம் இல்லத்தையும், உள்ளத்தையும் ஆளும்படி இந்த மனுகுலத்திற்க்காக தேவகுமாரன் மனுஷகுமாரானாய் பிறந்தார். நாம் பாவிகளாய் இருக்கையில் கிறிஸ்து நமக்காக பிறந்து, நம்மில் ஒருவராக வந்தார் என்பதுதான் கிறிஸ்து பிறப்பில் விளங்கும் உண்மையாகும். ஆண்டவர் நம் உள்ளங்களிலும், இல்லங்களிலும் வாழ இடங்கொடுப்போம். இந்த பண்டிகை நாட்கள் உங்கள் ஒவ்வொருவருக்கும் மிகுந்த சந்தோசமும், மகிழ்ச்சியும், சமதானமும், ஆசீர்வாதமுமாய் அமைய சபைக்கமிட்டி சார்பாக அன்போடு வாழ்த்துகின்றோம். எதிர்நோக்கியிருக்கின்ற 2020-ம் ஆண்டு எல்லா நலமும், ஆசீர்வாதம் நிறைந்த ஆண்டாய் அமைய ஆண்டவர் கிருபை செய்வாராக. நமது திருச்சபை, போதகர் தலைமையில் சிறப்பாக வழிநடத்தப்பட கர்த்தர் கிருபை செய்துவருகிறார். இறைமக்கள் இம்மட்டும் தந்துவரும் அனைத்து ஆதரவுக்கும்,பங்களிப்புகளுக்கும், ஆலோசனைக்கும் நன்றி சொல்லுகிறோம்.

புதிய ஆண்டிலும் அனைத்து சபையின் காரியங்களுக்கும் ஒத்துழைப்பு தர அன்போடு கேட்டுக்கொள்ளுகிறோம்.

கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

**சபைகமிட்டி சார்பில்,**

**Mr. Sujith Gladson**
**சபை செயலர்**

## ஆண்கள் ஐக்கிய சங்க கிறிஸ்மஸ் வாழ்த்து




இறை இயேசுவில் அன்பிற்குரியவர்களே! 2019-ம் ஆண்டு முழுதும் நம்மை வழிநடத்திய ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். இந்த ஆண்டு முழுவதும் ஆண்கள் சங்கத்திற்கு தந்த அனைத்து ஒத்துழைப்பிற்கும் நன்றி கூறுகிறேன். ஆண்கள் சங்கத்தின் சார்பில் அனைவருக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

**அறிவிப்பு** : 13-12-2019 ஆண்கள் ஐக்கிய சங்க ஆண்டுவிழா

**திரு. சைலஸ்**
**ஆண்கள் ஐக்கிய சங்க செயலர்**

## பாடலின் பின்னணியம்

### கண்டேனென் கண்குளிர

**லூக்கா 2 : 25 – 32**

**பாடல்: ஆபிரகாம் பண்டிதர்**
**ராகம்: ஆபிரகாம் பண்டிதர்**

**பல்லவி**

கண்டேனென் கண்குளிர – கர்த்தனை யின்று

**அனுபல்லவி**

கொண்டாடும் விண்ணோர்கள் கோமானைக் கையிலேந்திக்
- கண்டேனென்

**சரணங்கள்**

1. பெத்தலேம் - சத்திர முன்னணையில்
உற்றோருக் - குயிர் தரும் உண்மையாம் என் ரட்சகனைக்
- கண்டேனென்

சென்னை பெரியார் திடலில் கிறிஸ்மஸ் இன்னிசைக் முழங்கிக்

கொண்டிருந்தது. சிமியோனின் ஆனந்தக் களிப்பை இசைமழையாகப் பொழிந்து கொண்டிருந்தனர் தஞ்சை இம்மானுவேல் இசைக் குழுவினர்.

“கண்டேன் என் கண் குளிர
கர்த்தனையின்று கண்டேன் என் கண் குளிர”

கூடியிருந்த மக்கள் அவ்விசையின் இனிமையை ரசித்துக் கொண்டிருந்த வேளையில், திடீரென மின்சாரம் தடைப்பட, பெரியார் திடல் இருளில் மூழ்கியது!

இசைக்குழுவின் தலைவர் திரு. T.A.G. துரைப்பாண்டியனும், குழுவின் மற்ற அங்கத்தினர்களும் கணப்பொழுது திகைத்தனர். ஆயினும், இசைக்குறியீடுகளைப் பாராமலே, ஒலி பெருக்கியின்றித் தொடர்ந்து பாடினர். நேரம் செல்லச்செல்ல, பாடகர்களில் ஆண்களும், பெண்களும் மாறி மாறி, “கண்டேன் கர்த்தனை இன்று,” என்று உற்சாகத்துடன் உரத்த சத்தமாய்ப் பாட, பாடலின் உச்சக்கட்டத்தில் அனைவரும் ஒருங்கிணைந்து, “கண்டேன்! என்று முழங்க, “பளிச்” என விளக்குகள் திடலில் ஒளிர்ந்தன. அவையோரின் முகங்களும் மலர்ந்தன. இருள் சூழ்ந்த வேளையில், “கண்டேன் கர்த்தனை இன்று” என்ற பாடல், ஜெய தொனியாக என்னைப் பரவசப்படுத்தியது என்றார் ஒருவர்!

கிறிஸ்துமஸ் காலங்களில் அனைவரும் மிகவும் விரும்பி பாடும் இப்பாடலை இயற்றியவர் இசை மாமேதை ஆபிரகாம் பண்டிதர் ஆவார். ஆபிரகாம் பண்டிதர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சாம்பவார் வடகரை என்னும் ஊரில், முத்துசாமி அன்னம்மாள் தம்பதியருக்குப் புதல்வராக 2-8-1859 அன்று பிறந்தார். எளிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தாலும், தமது அயராத உழைப்பாலும், விடா முயற்சியாலும், சிறப்பாகக் கற்றுத் தேர்ந்து ஆசிரியரானார். அச்சுக்கலை, தோட்டக்கலை, சித்த வைத்தியம், இசை ஆராய்ச்சி என்று, பல துறைகளிலும் சிறந்து விளங்கினார்.

இளமையிலேயே பக்தி நெறியில் சிறந்து விளங்கிய ஆபிரகாம், செந்தமிழில் இறைவனைப் போற்றிப் பாடல்கள் இயற்ற ஆரம்பித்தார் வாழ்விலும், தாழ்விலும், இறைவனோடு ஒன்றி வாழக் கற்றுக்கொண்டார்.

ஆபிரகாம் பண்டிதர் தஞ்சையை மையமாகக் கொண்டு வாழ்ந்ததால், அவ்வூர் அவரது பெயருடன் இணைந்து புகழ் பெற்றது. அவர் ஏழு இசை மாநாடுகளைத் தஞ்சையில் தம் சொந்தச் செலவில் நடத்தினார். இசைத்தமிழை ஆராய்ந்து, தாம் கண்டுபிடித்த உண்மைகளை 1917–ம் ஆண்டு கருணாமிர்த சாகரம் - முதல் புத்தகத்தில் வெளியிட்டார். கருணாமிர்த சாகரம் - இரண்டாம் புத்தகத்தில் ராகங்களைப் பற்றிய முழு விபரங்களையும் கொடுத்துள்ளார்.

இவ்விரு ஆராய்ச்சி நூல்களின் அடிப்படையில் பண்டிதரின் பேரனான D.A. தனபாண்டியன் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பாக, "நுண்ணலகுகளும் இராகங்களும்" என்ற தலைப்பில், மேலும் ஆராய்ச்சி செய்து, ஆபிரகாம் பண்டிதரின் கண்டுபிடிப்புகளை உபகரணங்களுடன் நிருபித்தார். இம்முயற்சியைப் பாராட்டி, தமிழக அரசு 1990-ம் ஆண்டு அவருக்குக் "கலைமாமணி" பட்டம் அளித்து கௌரவித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இசையில் சிறந்து விளங்கிய ஆபிரகாம், இயேசு பெருமானின் நாமத்தைத் துதிப்பதையே தன் வாழ்வின் பேரின்பமாகக் கருதினார்.

**பாடகர் குழு – C.S.I Tamil Church Oman (நன்றி: அமைதி நேர ஊழிய வெளியீடு)**

## மனிதர்களை தேடிய மாமனிதர்கள் ~ கார்ல் குட்சலாப்

### கொஞ்சத்திலும் உண்மை...



**மண்ணில்** : **08-07-1803**
**விண்ணில்** : **09-08-1851**
**ஊர்** : **போமரேனியா**
**நாடு** : **நெதர்லாந்து**
**தரிசன பூமி** : **நெதர்லாந்து**

பரிணாமக் கொள்கையை உருவாக்கிய சார்லஸ் டார்வின் தன் வாலிபப் பிராயத்தில் ஒருநாள் தென் சமுத்திர தீவுகளில் ஒன்றை சந்தித்தார். அங்கு உள்ள மக்களோ காட்டுமிராண்டிகளாகவும், நாகரிகமற்றவர்களாகவும் காணப்பட்டனர். அவர்களைக் கண்ட டார்வின், இம்மக்களை சீர்திருத்தக்கூடிய வல்லமை இவ்வுலகில் எவருக்கும் இல்லை என்று தன்னுடைய நாட்குறிப்பில் எழுதினார்.

ஆண்டுகள் பல கடந்தன. மறுபடியும் அவர் அத்தீவை சந்தித்தபோது, நல்ல நாகரிகமும், சிறந்த சன்மார்க்க ஒழுக்கமும், சாந்தகுணமும், சமாதான சிந்தையுமுள்ள ஒரு சமுதாயத்தை அங்கு கண்டு மிகவும் அதிசயித்தார். இது எப்படி நேர்ந்தது? இயேசு கிறிஸ்துவின் அன்பிற்குத் தன்னை ஒப்புக்கொடுத்து அவரின் அழைப்பிற்கு அடிபணிந்தவர்களால் மட்டுமே இம்மாற்றத்தைக் கொண்டுவரமுடியும்.

சீன மக்களைத் தேடி புறப்பட்டவர் கார்ல் குட்சலாப். கம்யூனிசம் முழுவதுமாகப் பரவியிருந்த காலம் அது. 1828-ம் ஆண்டு தன்னுடைய 25-ம் வயதில், தாய்லாந்தில் ஊழியம் செய்த இவர், சீன மக்கள் மீது தனி

கவனம் செலுத்தினார். சீன மக்களைப்போன்று, உடை உடுத்தி, அவர்களின் நடை, உடை, பாவனைகளை தனதாக்கிக் கொண்டார். 1829-ம் ஆண்டு, புதிய ஏற்பாட்டை மொழிபெயர்க்க ஆரம்பித்த இவர், திருமணமான இரண்டு வருடத்திலேயே தனது மனைவியையும், பிஞ்சுக் குழந்தையான அன்புக் குழந்தையையும் இழந்து சோகத்திற்குள்ளானார். ஆயினும் கிறிஸ்து கொடுத்த பெலத்தினால் அம்மக்களின் மொழியிலேயே புதிய ஏற்பாட்டை வெளியிட்டார்.

1844-ம் ஆண்டு, சீன ஊழியர்களைப் பயிற்றுவிக்க கல்லூரி ஒன்றை நிறுவினார். வயிற்றுப் பிழைப்புக்காக இவரிடம் வந்த சிலர், ஊழியம் என்ற பெயரில் வேதாகமங்களை இலவசமாகப் பெற்று விற்றுப் பிழைத்தனர். அவர்களையும் உண்மை ஊழியர்களாக மாறச் செய்தார். ஹட்சன் டெய்லர் இவரை 'சீன இன்லாண்ட் மிஷன் என்ற ஸ்தாபனத்தின் தாத்தா' என்று இவரை அழைத்தார். "சீன சுவிசேஷ சங்கம்' ஒன்றை ஆரம்பித்தார். சீனாவில் மாபெரும் மறுமலர்ச்சி ஏற்படக் காரணமானார்.

அன்பரே! இயேசுவை அறியாத மக்களைத் தேடிப் புறப்பட ஆயத்தமாகிவிட்டீர்களா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு** : ஊழியத்திற்காக ஊதியம் வேண்டும், ஆனால் ஊதியத்திற்காக ஊழியம் வேண்டாம் - வேதாகம நண்பன்

**குயவனின் கரங்களில்** : ஆண்டவரே! நீர் எனக்குத் தந்த உம்முடைய ஊழியத்தை உண்மையும், உத்தமுமாக செய்ய என்னை வழிநடத்தும்.

**தியானத்திற்கு : எஸ்தர் 9-10, யோனா 1, எபிரெயர் 6-7**

(**நன்றி**: 365 மிஷனெரிகளின் வரலாறு)

## பெண்கள் ஐக்கிய சங்க கிறிஸ்மஸ் வாழ்த்து




பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில் அனைவருக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். இந்த ஆண்டு தந்த ஒத்துழைப்பைப்போல புதிய ஆண்டிலும் ஒத்துழைப்பு தந்து பெண்கள் சங்கம் சிறப்பாக செயல்பட ஆதரவு கரம்கோர்த்துக்கொள்ள அன்பாய் கேட்கிறோம்.

**திருமதி. சாரா ராஜாசிங்**
**பெண்கள் ஐக்கிய சங்க செயலர்**

## May God Bless All

### Birthday Celebrants – December 2019

| | |
|---|---|
| 01st December | Mrs. Regin Justa, W/o Mr. Vinolin Vetha Kumar |
| 04th December | Mr. Ramji |
| 05th December | Mr. Sylus |
| 05th December | Miss. N. Renisha, D/o Mr. Nethaji |
| 05th December | Mrs. Borish Shiny, W/o Mr. Rejicilin |
| 06th December | Miss. Febin D. Melbina, D/o Mr. Devaraj |
| 10th December | Mrs. Percy, W/o Mr. Jean C. R. Shibin |
| 12th December | Master. J. S. Jayden Shano, S/o Mr. Jino Retnakumar |
| 13th December | Mr. Jose Chandra Bose |
| 13th December | Mr. Austin Daniel Raj |
| 14th December | Mrs. Thamari, W/o Mr. Johnson Raj |
| 15th December | Master. Joshua, S/o Mr. Kingsly Paul |
| 18th December | Mr. N. A. Srinivas |
| 18th December | Master. Davin Juanito, S/o Mr. Rejicilin |
| 20th December | Miss. Amiga Eliz Augustin, D/o Mr. S.Augustin |
| 21st December | Mrs. Mary Praveena, W/o Gobinath |
| 21st December | Mrs. Nirmala, W/o Mr. Pushpakaran |
| 21st December | Miss. A. S. Afina Sha, D/o Mr. Ajin |
| 26th December | Mr. Ennesar Jesu Paul |
| 29th December | Miss. Ansina Yelen Augustin, D/o Mr. S. Augustin |
| 29th December | Mr. Mohan Babu |
| 29th December | Mr. Anlin Justin |
| 29th December | Master. Prince Jotham, S/o Mr. Johan Pratheep |
| 31st December | Mr. Ahigen Paul |

### Wedding Anniversary Celebrants – December 2019

| | |
|---|---|
| 04th December | Mr. M. Sylus & Mrs. Delphin Mary |
| 15th December | Mr. Srinivas & Mrs. Cynthiya |
| 19th December | Mr. Gnana Ruban & Mrs. Maria Tracy |
| 19th December | Mr. Jebastin & Mrs. Sabitha |

| | |
|---|---|
| 21st December | Mr. Bejo Nelson & Mrs. Aspin Mercilent Ethel |
| 21st December | Mr. Immanuel Prince & Mrs. Baby Raja Kumari |
| 26th December | Mr. Pratheesh & Mrs. Binita |
| 27th December | Mr. Herbert Goldston & Mrs. Kiruba |
| 27th December | Mr. Vimal Kumar Stephen & Mrs. Esther |
| 28th December | Mr. Deva Raj & Mrs. Vijaya Kumari |
| 28th December | Mr. Jenkin Raj & Mrs. Mahizha |
| 28th December | Mr. Anto Kingston & Mrs. Josephin Jeba Sharmy |
| 28th December | Mr. Jerry Jones & Mrs. Monisha |
| 28th December | Mr. Raja Singh & Mrs. Sarah |
| 29th December | Mr. V. N. Rajan & Mrs. Nisha |
| 29th December | Mr. Dhinakaran & Mrs. Jenelia |
| 29th December | Mr. Rejicilin & Mrs. Borish Shiny |
| 30th December | Mr. David Sundarsing & Mrs. Jancy |

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ டிசம்பர் 2019

| | | |
|---|---|---|
| 06-12-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Choir Member |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Choir Member |
| 13-12-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Men's Fellowship |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Men's Fellowship |
| 20-12-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Divya Darlin Kasiraja |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Jose Chandra Bose |
| 25-12-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Committee Member |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Committee Member |
| 27-12-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Felsy John |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Jogan Gnanasekaran |
| 01-01-2020 | முதலாம் திருமறைப்பகுதி | Committee Member |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Committee Member |
| 03-01-2020 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Golden Irene Sheeja Robin |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Jerry Sathya |

# செப்டம்பர் 2019 மாத வரவு செலவு விபரம்

# Income & Expenditure for the Month Sep - 2019

| | | | |
|---|---|---|---|
| Opening Bank Balance as per bank on 01-09-2019 | | | 4964.285 |
| Opening Cash Balance as per book on 01-09-2019 | | | 24.170 |
| | | | **4,988.455** |
| **Expenditure Details** | **Amount** | **Receipts details** | **Amount** |
| Pastor salary | 350.000 | Arunodayam offering | 25.600 |
| Parsonage rent | 250.000 | Birthday | 38.000 |
| Provident fund | 47.700 | Car | 165.000 |
| Parsonage cleaning exps | 15.000 | Christmas coupan | 2.000 |
| Church car Cleaning | 5.000 | Church Auctions | 11.500 |
| Land Line Bill | 20.250 | Fasting prayer offering | 19.200 |
| Gsm Bill | 12.700 | Men's Fellowship | 11.700 |
| Pastor driving license Exps | 190.000 | VBS | 18.000 |
| Toyota Corolla 1.6 - EMI - 18 | 149.000 | Missionary offering | 547.200 |
| Fuel Exps | 17.100 | Night prayer | 22.000 |
| Parsonage Utility Exp | 7.830 | Pastor Fund | 10.000 |
| Photo copy exps | 15.000 | Special offering | 13.000 |
| Refreshment exps | 51.390 | Sponsorship | 174.700 |
| Fasting prayer lunch | 32.000 | Subscription | 72.500 |
| Transport | 72.000 | Sunday Class | 82.000 |
| Bank Charges | 2.000 | Thanks giving | 408.000 |
| Preachers Gift - 19.9.2019 - Rev. James Pandian | 20.000 | Wedding day | 30.000 |
| Parsonage Utility payment - Electricity & water | 288.000 | Weekly Offering | 292.400 |
| Church day shawl purchase | 10.700 | Women's Fellowship | 9.400 |
| Church worker Mr. Justine salary Advance | 5.000 | Women's Fellowship sales | 199.900 |
| | | Harvest Auctions | 130.500 |
| | | Harvest cover offering | 140.000 |
| **Total Exps** | **1,560.670** | **Total Incomes** | **2,422.600** |
| Surplus (Income - Expenses) | 861.930 | | |
| Opening Bank Balance | 4,964.285 | | |
| Cheque Payment (Bank charges) | 252.000 | | |
| Bank balance after cheque deposit | 4,712.285 | | |
| Sep Month Cash deposited in bank | 460.000 | | |
| Closing bank balance - Sep | 5,172.285 | | |
| Closing Cash | 678.100 | | |
| Total fund | 5,850.385 | | |
| Welfare fund from monthly income | 86.193 | | |
| Accumulated Welfare fund (Jan - Sep) | 266.233 | | |

# ஆண்டவர் விரும்பும் சமாதான வாழ்வு

இஸ்ரவேல் மக்கள் ஆண்டவர் விரும்பும் செயல்கள் பல செய்தாலும் சில நேரங்களில் தங்கள் சுயவிருப்புகளுக்கு இணங்கி செயல்பட்டனர். நேர்மையற்று நடந்தனர். அநீதிக்கு தலைவணங்கினர். தீச்செயல்கள் பல புரிந்தனர். ஏழைகளை ஏமாற்றினர். ஆதரவற்றவர்களை நசுக்கினர். நெறிதவறி நடந்து முறையற்ற வாழ்வு வாழ்ந்தனர். சமாதானமற்று வாழ்ந்தனர்.

"பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்" எனக் கூறும் ஆண்டவரின் திருவிருப்பப்படி வாழும் வாழ்வையே கடவுள் விரும்புகிறார். இன்று நாம் சமாதானமாய் வாழ்வதற்கு ஆண்டவர் நம்மில் விரும்பும் பலிகள் நல்ல பண்புகளாகும். அவை எவையென மீகா இறைவாக்கினரின் ஆலோசனையின்படி பார்ப்போம்.

## 1. நேர்மை உள்ளம்:- (மீகா 6:8)

நியாயம் செய்தல் என்பதற்கு "நேர்மையை கடைபிடித்தல்" என திருவிவிலியத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இங்கு நீதி செய்தலே "நேர்மை" என பொருள்கொள்ளப்படுகிறது. கடவுள் நீதிக்கு காரணரும், நீதிபரரும் ஆவார். அவரைப் பின்பற்றுவோரும் நீதிநேர்மை உடையவராக இருக்கவேண்டும் என அவர் விரும்புகிறார். காரணம் அவர் ஓரவஞ்சனை இல்லாமல் நீதிசெய்பவர். மனிதர்கள் தவறுசெய்து சமாதானம் இழந்தும் அவர்களை அழிக்கவில்லை.

"கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், ஆராய்ந்து அறிவதே மெய்" என்பதற்கிணங்க விபசாரத்தில் பிடிப்பட்ட பெண்ணிற்கு இயேசு தந்த தீர்ப்பே சிறந்த ஒரு எடுத்துக்காட்டு (யோவான் 8:1-12). இன்று நம்முடைய தீர்ப்பு இந்த சமூகத்தில் எவ்வாறு உள்ளது? வழியருகே ஆடு மேய்த்துக்கொண்டிருந்த இரு வாலிபர்களுக்கிடையில் சண்டை - வழியில் கட்டடம் கட்டிய செயலுக்காக. அவர்கள் அவ்வூர் நீதிபதியிடம் தீர்ப்பு வேண்டி சென்றனர். போகும் வழியில் ஒரு குடம் தண்ணீருடன் நீதிபதி ஒருவர் எதிர்ப்பட்டார். வந்தவர்களில் வழக்குத் தொடுப்பவர் தங்கள் குற்றத்தை கூறினார். வழியில் தண்ணீர்க் குடத்தை இறக்கி வைத்தால் பாதைக்கு தடைவரும் என நினைத்துத் தோளில் வைத்துக்கொண்டு தீர்ப்புச் சொன்ன நீதிபதியின் நேர்மை குணத்தைப் பார்த்து, புரிந்துகொண்டு வழக்குத் தொடுத்தவர் அங்கிருந்து போய்விட்டார்.

## 2. இரங்கும் உள்ளம்:- (மீகா 6:8)

இரங்கும் உள்ளம் கொண்ட மனிதர்கள் புகழ்பெற்று விளங்குவர். இஸ்ரவேலரை துன்புறுத்தும் செயல்களில் ஆண்குழந்தைகளைக் கொல்ல தாதியர்களிடம் மன்னன் கட்டளையிட்டார். தாதியர்கள் எபிரெய

பிள்ளைகளைக் கொல்ல மனதில்லாமல் அவர்கள் மேல் இரங்கினர் (யாத். 2:6). ஆண்டவர் பரிவுள்ள கடவுள், அவர் இரக்கம் ஆயிரம் தலைமுறை மட்டுமுள்ளது. ஆண்டவர் தம் பணி வாழ்வில் பலநிலைகளில் தம் இரக்கத்தை வெளிப்படுத்தினார். கைம்பெண்ணின் மீது மனமிரங்கியது. பசியோடிருந்த மக்களுக்கு உணவுகொடுக்க அவர்கள்மேல் அக்கறைக்கொண்டது. நிலைவாழ்வுபெற என்ன செய்யவேண்டும்? எனக் கேட்ட இளைஞனிடம் எளியவர்களுக்கு இரங்கவேண்டும் என அறிவுறுத்தியது. மரித்துப்போன லாசருவை உயிர்த்தெழ வைத்தது. இவையெல்லாம் அவரது இரக்கத்தின் வெளிப்பாடுகள்.

இரக்கமுள்ள மனம் படைத்தவரே இருப்பதை இல்லாதவர்களுக்கு கொடுக்க முன்வருவர். இல்லாதவருக்கு இரக்கம் செய்பவர் பாக்கியவான்கள் (நீதி. 14:2). அவர் ஆண்டவருக்கு கடன் கொடுக்கிறார். கொடுத்ததை திரும்பக் கொடுக்கும் கடவுளின் அருளால் திரும்பப்பெறுவார். கொஞ்சம் இருந்தும் எலியாவிற்கு உணவுகொடுத்த சாரிபாத் விதவையும், தனக்கென கொண்டுவந்த அப்பங்களையும், மீன்களையும் கொடுத்த சிறுவனும் பன்மடங்காய் ஆசிப்பெற்றனர். நாமும் எளியவர்க்கு இரங்கி, வாழ்வில் ஏற்றம் காண்போம்.

### 3. தாழ்மை உள்ளம் மீகா (6:8):-

மேன்மைக்கு முன்னானது தாழ்மை (நீதி. 15:33, 18:12). தாழ்ந்த சிந்தையுள்ளோரிடம் ஞானம் இருக்கும் (நீதி. 11:12). தாழ்ச்சி உடையவர்களுக்கு ஆண்டவர் அருள் வழங்குகிறார். தம்மை வாழ்வின் இறுதிவரை தாழ்த்தினார் (பிலி. 2:8). இயேசுவிடம் தாழ்ச்சி இருந்தது. அதுவே பலர் அவரால் கவரப்படவும், பலர் அவரிடம் நம்பிக்கைக் கொள்ளவும் வழிவகுத்தது. அவரது தாழ்மை காறி உமிழ்ந்ததை ஏற்றது; அடித்து உதைத்ததை வாங்கியது. இழிவார்த்தைகளுக்கு மௌனத்தைத் தந்தது.

நாம் தாழ்மையுடன் இருந்தால் புகழ்ச்சியோ, இகழ்ச்சியோ எதுவும் நம்மை மாற்றமுடியாது. மாறாக பெருமை கொள்ளும்போது அதும் நம் உருவை, குணத்தை பண்பை மாற்றுகிறது. இதற்கான எடுத்துக்காட்டு நேபுகாத்நேச்சார் ஆவார் (தானி. 4:30-33). ஆனால் ஆகாப் அரசர் தம்மைத் தாழ்த்தினதினால் ஆண்டவர் அருளைப் பெற்றார்.

இன்று பணம், பதவி, புகழ் போன்றவற்றினால் வரும் பெருமையில் சிக்கி, சமாதானமற்று வாழ்ந்துகொண்டிருக்கும் மனிதர்களிடம் ஆண்டவர் எதிர்பார்ப்பது நேர்மையான உள்ளம், இரங்கும் உணர்வு மற்றும் தாழ்மையான உள்ளமும்தான். எனவே இவையனைத்தையும் நம்மகத்தே கொண்டு இறைவன் விரும்பும் சமாதான வாழ்வை வாழ்வோமாக.

**- V.G. மஹிழா ஜெங்கின்ராஜ்**

## பெண்கள் பகுதி

### நவம்பர் 2019 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. நீதிமான் - சங். 64:10
2. பலனை – சங். 67:6
3. ஆத்துமா – சங். 63:5
4. சீனாய் - சங். 68:8
5. நாவு – சங். 71:24
6. நிந்தை – சங். 69:20
7. பிராணனை அழிக்கத் தேடுகிறவர்கள் - சங். 63:9,10
8. பாசான் பர்வதம் - சங். 68:15
9. பூமியை – சங். 65:9
10. வெள்ளியைப் - சங். 66:10
11. மலைகளின் உச்சியில் - சங். 72:16
12. ஆண்டவராகிய கர்த்தரால் - சங். 68:20
13. சத்துருக்கள் - சங். 66:3
14. ஷேபா, சேபா ராஜாக்கள் - சங். 72:10
15. பகைக்கிறவர்கள் - சங். 68:4
16. நாவை – சங். 64:3
17. பள்ளத்தாக்கு – சங். 65:13
18. திக்கற்ற பிள்ளைகளுக்கு – சங். 68:5
19. சிதறடிப்பார் - சங். 68:30
20. சமாதானம் - சங். 73:7

### நவம்பர் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| Mrs. Aspin Bejo | Mrs. Leela Gladson | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Boopathi Baskar | Mrs. Manju Martin | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Felsi Rani John | Mrs. Nisha Rajan | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Percy Jean | Mrs. Shiney Johan |
| Mrs. Jancy Deepa Victor | Mrs. Priyadarsini Kanagavel | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Regin Justa Vinolin | Mrs. Virgin Jegatha Jino |
| Mrs. Juslin Jaslin | Mrs. Sapthekha Jerry Sathya | |

**பாலைவன மன்னாவில் பெண்கள் பகுதியில் திருமறை அறிவுப்போட்டிக்கு விடை எழுதியவர்களின் மதிப்பெண்கள் (January to November)**

| | | | |
|---|---|---|---|
| Mrs. Jancy Deepa Victor | 220 | Mrs. Sathya Priya Ramesh | 218 |
| Mrs. Juslin Jaslin | 220 | Mrs. Shiney Johan | 218 |
| Mrs. Leela Gladson | 220 | Mrs. Shabila Gnanadhas | 200 |
| Mrs. Priyadarsini Kanagavel | 220 | Mrs. Sapthekha Jerry Sathya | 198 |
| Mrs. Regin Justa Vinolin | 220 | Mrs. Virgin Jegatha Jino | 198 |
| Mrs. Vanitha Rani Prince | 220 | Mrs. Nisha Rajan | 177 |
| Mrs. Aspin Bejo | 219 | Mrs. Pushpa Rani Moorthy | 159 |
| Mrs. Boopathi Basker | 219 | Mrs. Menaka David | 119 |
| Mrs. Sarah Rajasingh | 219 | Mrs. Gracilin Melba Sujin | 116 |
| Mrs. Golden Irene Sheeja Robin | 218 | Mrs. Felsi Rani John | 100 |
| Mrs. Jeya Rani Victor | 218 | Mrs. Eban Silvia Ennesar | 59 |
| Mrs. Manju Martin | 218 | Mrs. Sujatha Shalini Jino | 38 |
| Mrs. Percy Jean | 218 | | |

## ஆண்கள் பகுதி

1. உசியா – 2நாளா. 26:9,10
2. அத்தாலியாள் - 2நாளா. 22:2
3. எட்டு நாளில் - 2நாளா. 29:17
4. 32 வயது – 2நாளா. 21:5
5. எலிஷாபாத் - 2நாளா. 23:1
6. அம்மோனியர் - 2நாளா. 26:8
7. யோவாஸ் - 2நாளா. 24:1
8. ஏழு நாள் - 2நாளா. 30:21
9. யோதாம் - 2நாளா. 27:9
10. யோராம் - 2நாளா. 21:3
11. உப்புப் பள்ளத்தாக்கு – 2நாளா. 25:11
12. அத்தாலியாள் - 2நாளா. 22:3

13. எரிகோ – 2நாளா. 28:15

14. 130 வயது – 2நாளா. 24:15

15. உசியா – 2நாளா. 26:19,20

16. யோராம் - 2நாளா. 21:19

17. ஆறு வருஷம் - 2நாளா. 22:12

18. எப்பிராயீம், மனாசே கோத்திரங்களுக்கு – 2நாளா. 30:1

19. பெக்கா – 2நாளா. 28:6

20. யெகூ - 2நாளா. 22:7

**நவம்பர் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்**

| | |
|---|---|
| Mr. Alex Baskar | Mr. Kanagavel |
| Mr. Jaslin Sundara Kumar | Mr. Prince J. P. |
| Mr. Jean C. R. Shibin | Mr. Rajan V. N. |
| Mr. Jino John | Mr. Ramesh |
| Mr. Johan Pratheep | Mr. Robin Devadhas |

**பாலைவன மன்னாவில் ஆண்கள் பகுதியில் திருமறை அறிவுப்போட்டிக்கு விடை எழுதியவர்களின் மதிப்பெண்கள் (January to November)**

| | | | |
|---|---|---|---|
| Mr. Jean C. R. Shibin | 220 | Mr. Jino John | 200 |
| Mr. Johan Pratheep | 220 | Mr. Jaslin Sundara Kumar | 195 |
| Mr. David Prabhakaran | 219 | Mr. Rajan V.N. | 179 |
| Mr. Ramesh | 219 | Mr. Sylus | 158 |
| Mr. Robin Devadhas | 219 | Mr. Selvamoni | 137 |
| Mr. Kanagavel | 218 | Mr. Mohan Babu | 98 |
| Mr. Prince J. P. | 218 | Mr. Anand | 79 |
| Mr. Alex Baskar | 215 | Mr. Vinolin | 60 |
| Mr. Bejo Nelson | 214 | Mr. Jabastin Thana Sekar | 40 |
| Mr. Anu | 209 | | |

## ஜெபிக்க சில குறிப்புகள்

### திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- நமது திருச்சபை போதகருக்காகவும், குடும்பத்திற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், திருப்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.
- நமது திருச்சபையின் முன்னாள் குருவானவர்களுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது சபைக்கான போதகர் விசா விரைவில் கிடைப்பதற்காகவும் ஜெபிப்போம்.
- சபையின் நிர்வாக குழுவுக்காகவும், அவர்கள் தெய்வ பயத்தோடு திருச்சபையின் கடமைகளை நிறைவேற்றிடவும் ஜெபிப்போம்.
- திருச்சபையின் கிளைச்சங்கங்கள் சிறப்பாக செயல்பட, நல்ல வளர்ச்சி காண ஜெபிப்போம்.
- எல்லா ஆராதனைகளும் சிறப்பாய் நடைபெறவும், பங்கேற்போர் தேவாசீர்வாதம் பெறவும் ஜெபிப்போம்.
- திருச்சபைப் பணிகளை தன்னார்வமாய், உற்சாகமாய் தாங்கிவரும் அங்கத்தினர்களுக்காக ஜெபிப்போம்.
- பலர் நம்மோடு இணைந்து ஆண்டவரை ஆராதிக்கவும், திருச்சபை புதிய வளர்ச்சி பெறவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- இந்தியாவிலுள்ள நமது சொந்த திருச்சபைக்காகவும், பேராயங்களுக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும், பேராயர், போதகர்கள் குடும்பத்திற்காகவும், திருப்பணி வளர்ச்சிக்காகவும் ஜெபிப்போம்.
- நமது பேராயத்தின் பேராயர் Rt. Rev. Dr. செல்லையா அவர்கள் இறைபணி மூலம், இறை சித்தம் நிறைவேற்றும் பேராயராய் செயல்பட்டு, பேராயம் நல்ல முறையில் இயங்கவும், இறையருள் வேண்டி மன்றாடுவோம்.

### மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- நாம் தாங்கிவரும் 11 மிஷனெரிகளுக்காகவும், அவர்கள் தம் பணிக்களங்களில் செய்யும் அருட்பணிகளுக்காகவும், அவர்களது குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது தேசத்தில் நடைபெறும் எல்லா மிஷனெரி பணிகளுக்காகவும், பணித்தளங்களில் மிஷனெரிகள் சந்திக்கும் பிரச்சனைகளை அவர்கள் மேற்கொண்டு, தொடர்ந்து தைரியமாய் ஊழியம் செய்ய இறைபெலன் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

- ஆலயங்கள் கட்டப்பட அனுமதி கிடைக்காமல் இருக்கிற திருச்சபைகளுக்காக கருத்தாய் ஜெபிப்போம்.
- வேதாகம சங்கத்தின் பணிகளுக்காக, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
- தொழுகைகள் நடத்த இயலாமல் தடைபடுத்தும் மக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

**தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-**

- தேசத்தலைவர்களுக்காகவும், அரசு அதிகாரிகளுக்காகவும், அதிகாரத்திலுள்ள அனைவரும் நேர்மையும் பயனுள்ள வகையிலும் ஆளுகைசெய்ய ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இன்றைய நம் நாட்டின் எல்லாத் துறைகளிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இதனால் ஏழை எளிய மக்கள் அரசு சலுகைகளை, உரிமைகளைக்கூட சரிவர பெறமுடியாதச் சூழலில், ஊழல் என்னும் தீமை அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- மது என்னும் தீமை இன்றைய சமுதாயத்தையும், குடும்பத்தையும், தனிமனித வாழ்வையும் பெரிதும் பாதித்துவரும் சூழலில் தமிழகத்தில் பூரண மதுவிலக்கு கொண்டுவரப்பட ஆண்டவரை நோக்கி மன்றாடுவோம்.
- வாழ்வில் குறுக்கிடும் துன்பம், தோல்வி, நோய், கடன்பாரம் போன்றவைகளுக்கு தீர்வு தற்கொலையே என்கிற முடிவில் பலர் தங்களுக்கு ஆண்டவர் ஈவாக தந்த உயிரை தாங்களே அழித்து வருகின்றனர். குறிப்பாக இளம் தலைமுறையினரே அதிக எண்ணிக்கையில் தற்கொலை செய்துவரும் சூழலில், தற்கொலை என்னும் தீமை முழுமையாக அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- வேலையின்றி வாடுவோருக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க அரசு புதிய தொழில் நிறுவனங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இந்திய தேசத்தின் பொருளாதார வீழ்ச்சி நிலைமாற மன்றாடுவோம்.

**குடும்பங்களுக்காக ஜெபிக்க:-**

- இந்த புதிய மாதத்தில் கர்த்தர் நம் ஒவ்வொருவரது குடும்பங்களையும் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.
- சிறுகுழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்கள், பெற்றோர், முதியோர் என எல்லாரும் ஆண்டவரது கிருபை பெற்றிட ஜெபிப்போம்.

- வியாதி, கடன், வேலை இழப்பு, விசா பிரச்சனை, எதிர்பார்ப்புகள் நிறைவேறாமை, குழந்தையின்மை, வழக்குகள் இவற்றினால் கஷ்டபடுகிறவர்களுக்காக ஜெபிப்போம்.
- தீய பழக்கமுடையோரின் மனமாற்றத்துக்காக ஜெபிப்போம்.
- கருவுற்றிருக்கிற சகோதரிகளின் உடல்நலத்திற்காகவும், சுகமான விடுதலைக்காகவும், தாய் சேய் ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.

## இந்த மாத முக்கிய நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 06-12-2019 | வெள்ளி- கிறிஸ்மஸ் கீத ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 13-12-2019 | வெள்ளி- ஆண்கள் ஐக்கிய சங்க ஆண்டுவிழா<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 20-12-2019 | வெள்ளி – குடும்ப பாடல் & கிறிஸ்மஸ் மரவிழா<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 21-12-2019 | சனி – கிறிஸ்மஸ் கலைஇரவு – திருமறைப்பள்ளி பிள்ளைகள்<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 7:00-9:00 |
| 24-12-2019 | செவ்வாய் – கிறிஸ்மஸ் சிறப்பு ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 11:00-1:00 |
| 27-12-2019 | வெள்ளி ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 31-12-2019 | செவ்வாய் - புதுவருட ஆராதனை<br>இடம் : மார்த்தோமா ஹால்/நேரம்: இரவு 11:00-1:00 |
| 02-01-2020 | வியாழன் – இரவு ஜெபக்கூடுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00 |
| 03-01-2020 | வெள்ளி – பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |

# அனுதின மன்னா – டிசம்பர் 2019

ஒவ்வொரு நாளும் வாசிக்கிறதற்காக ஒரு திருமறைப்பகுதி தரப்பட்டுள்ளது. வாசித்து, தியானித்து குடும்ப ஜெபத்தில் பயன்படுத்துங்கள். ஓராண்டில் திருமறைப்பகுதியை தனி ஜெபத்தில் தியானித்து பயனடையுங்கள்.

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| டிசம்பர் 1 | ஞாயிறு | மத்தேயு 5:1-16 | மத்தேயு 5:16 | கலா. 5-6 |
| டிசம்பர் 2 | திங்கள் | சங். 119:105-112 | சங். 119:105 | எபேசி. 1-2 |
| டிசம்பர் 3 | செவ்வாய் | ஏசாயா 60:1-14 | ஏசா. 60:3 | எபேசி. 3-4 |
| டிசம்பர் 4 | புதன் | ஆதி. 18:1-15 | ஆதி. 18:9 | எபேசி. 5-6 |
| டிசம்பர் 5 | வியாழன் | லூக்கா 21:7-19 | லூக்கா 21:19 | பிலிப். 1-4 |
| **டிசம்பர் 6** | **வெள்ளி** | **2தீமோ. 1:8-14** | **2தீமோ. 1:12** | **கொலோ. 1-4** |
| டிசம்பர் 7 | சனி | யோவான் 15:1-17 | யோவான் 15:9 | 1தெச. 1-3 |
| டிசம்பர் 8 | ஞாயிறு | சங். 119:97-112 | சங். 119:105 | 1தெச. 4-5 |
| டிசம்பர் 9 | திங்கள் | யோவான் 12:34-43 | யோவான் 12:36 | 2தெச. 1-3 |
| டிசம்பர் 10 | செவ்வாய் | கொலோ. 1:9-23 | கொலோ. 1:20 | 1தீமோ. 1-6 |
| டிசம்பர் 11 | புதன் | யோவான் 8:1-12 | யோவான் 8:12 | 2தீமோ. 1-4 |
| டிசம்பர் 12 | வியாழன் | மத்தேயு 6:19-24 | மத்தேயு 6:22 | தீத்து, பிலமோன் |
| **டிசம்பர் 13** | **வெள்ளி** | **யோவான் 8:12-18** | **யோவான் 8:12** | **எபி. 1-4** |
| டிசம்பர் 14 | சனி | 2கொரி. 3:11-18 | 2கொரி. 3:18 | எபி. 5-7 |
| டிசம்பர் 15 | ஞாயிறு | 1யோவான் 2:3-11 | 1யோவான் 2:10 | எபி. 8-10 |
| டிசம்பர் 16 | திங்கள் | யோவான் 3:20-21 | யோவான் 3:21 | எபி. 11-13 |
| டிசம்பர் 17 | செவ்வாய் | மத்தேயு 8:18-27 | மத்தேயு 8:26 | யாக். 1-5 |
| டிசம்பர் 18 | புதன் | 1யோவான் 2:3-11 | 1யோவான் 2:8 | 1பேதுரு 1-5 |
| டிசம்பர் 19 | வியாழன் | 1பேதுரு 2:4-10 | 1பேதுரு 2:9 | 2பேதுரு 1-3 |
| **டிசம்பர் 20** | **வெள்ளி** | **2கொரி. 4:1-6** | **2கொரி. 4:6** | **1யோ. 1-5** |
| டிசம்பர் 21 | சனி | யோவான் 1:1-9 | யோவான் 1:8 | 2யோவான் |
| டிசம்பர் 22 | ஞாயிறு | யோவான் 10:1-11 | யோவான் 10:10 | 3யோவான் |
| டிசம்பர் 23 | திங்கள் | ஏசாயா 9:1-7 | ஏசாயா 9:2 | யூதா |
| டிசம்பர் 24 | செவ்வாய் | அப். 9:1-20 | அப். 9:2 | வெளி 1-3 |
| டிசம்பர் 25 | புதன் | ஏசாயா 9:2-7 | ஏசாயா 9:6 | வெளி 4-7 |

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| டிசம்பர் 26 | வியாழன் | லூக்கா 2:22-35 | லூக்கா 2:32 | வெளி 8-12 |
| **டிசம்பர் 27** | **வெள்ளி** | **யோவான் 3:13-21** | **யோவான் 3:19** | **வெளி 13-16** |
| டிசம்பர் 28 | சனி | யோவான் 8:12-20 | யோவான் 8:12 | வெளி 17-19 |
| டிசம்பர் 29 | ஞாயிறு | மத்தேயு 13:36-43 | மத்தேயு 13:43 | வெளி 20-22 |
| டிசம்பர் 30 | திங்கள் | ஏசாயா 60:1-14 | ஏசாயா 60:1 | |
| டிசம்பர் 31 | செவ்வாய் | மத்தேயு 28:16-20 | மத்தேயு 28:20 | |
| ஜனவரி 1 | புதன் | உபா. 10:12-22 | உபா. 10:13 | |
| ஜனவரி 2 | வியாழன் | எசேக். 18:1-9 | எசேக். 18:9 | |
| ஜனவரி 3 | வெள்ளி | மத்தேயு 5:13-16 | மத்தேயு 5:16 | |

**வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்!**

# HAPPY CHRISTMAS TO YOU ALL



# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்

**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**
**Land Line : 2470 5784**
**E-mail : csitco@gmail.com**
**www.csitamilchurchoman.org**

**(For Private Circulation Only)**